முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.01/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.379/2012**

ராமலட்சுமி .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மூலம்
2. கோட்டாட்சித் தலைவர், கோட்டாட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி.
3. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருவேங்கடம் சாலை, சங்கரன்கோவில்.
4. நம்பித்தேவர் (இறந்தவர்)
5. தமிழ்செல்வி
6. விஜயகுமார்
7. சசிகலா
8. மகேந்திரன்
9. இசக்கியம்மாள்
10. காசித்தாய்
11. அனிதா
12. அருண்குமார்
13. மாரிராஜா
14. பாக்கியலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 19.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 5, 7, 9 முதல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:27:45 +0530

14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 6, 8 எதிர்மனுதாரர்களுக்கு செய்தித்தாள் மூலமாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 09.01.2026 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18–ன்படி, இவ்வழக்கில் 18.09.2019 தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை 06.03.2023 தேதியில் மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து, 05.08.2025 தேதியில் தீர்ப்பு செய்து இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதன்படி, இந்நீதிமன்றம் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளபடி, பிரதான வழக்கை இதன் மனு அடியிற்கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பின்பு 13.02.2015 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பில் 4ம் பிரதிவாதி அவசியகட்சி என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பின் மீது மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.29/2015 என முதல் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், எதிர்மனுதாரர்கள் மேற்படி வழக்கில் 4ம் எதிர்மனுதாரரை அவசியகட்சி என கட்சி செய்துள்ளதன் அடிப்படையில், மேற்படி 4ம் எதிர்மனுதாரர் கட்சி சேர்க்கக்கோரிய வ.வி.எண்.189/2018 மனு 15.04.2019 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் 4ம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:27:52 +0530

எதிர்மனுதாரர் 18.09.2019 தேதியிலும், அவரின் மனைவி 19 வருடங்களுக்கு முன்பும் இறந்துவிட்டார் என்றும், மேற்படியாரின் வாரிசான ராமசாமி என்பவர் 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், அதேபோல் மேற்படியார்களின் வாரிசான தீமராஜா என்பவர் காலமாகிவிட்டார் என்றும், அவர் 9 முதல் 11 வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், பிரிதொரு வாரிசான சித்ரா திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்றும், மற்ற வாரிசுகளான மாரிராஜா (இம்மனுவின் 13ம் எதிர்மனுதாரர்), பாக்கியலட்சுமி (இம்மனுவின் 14ம் எதிர்மனுதாரர்) ஆகியோர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை இந்நீதிமன்றம் 06.03.2023 தேதியில் அனுமதித்து உத்தரவிட்டு, பிரதான மேல்முறையீட்டு வழக்கில் இருதரப்பு விசாரணைக்கு பின்பு 05.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதின்படி, இந்நீதிமன்றம் மனுதாரர் வழக்கை கோப்புக்கு எடுத்து இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு சங்கரன்கோவில் சார்புநீதிமன்றம் வாரிசு சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை 06.03.2023 தேதியில் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து இந்நீதிமன்றம் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளபடி, இந்த பிரதான வழக்கை சீர்திருத்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடியதாக இருக்கிறது என்றும், ஆகையால், இவ்வழக்கில் 18.09.2019 தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை 06.03.2023 தேதியில் மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து, 05.08.2025 தேதியில் தீர்ப்பு செய்து இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதன்படி, இந்நீதிமன்றம் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளபடி, பிரதான வழக்கை இதன் மனு அடியிற்கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:00 +0530

இம்மனுவின் 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது இவ்வழக்கில் 18.09.2019 தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை 06.03.2023 தேதியில் மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து, 05.08.2025 தேதியில் தீர்ப்பு செய்து இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதன்படி, இந்நீதிமன்றம் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளபடி, பிரதான வழக்கை இதன் மனு அடியிற்கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேற்படி இவ்வழக்கில் 18.09.2019 தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்கக்கோரிய வ.வி.எண்.6/2023 மனுவை 06.03.2023 தேதியில் மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து, 05.08.2025 தேதியில் தீர்ப்பு செய்து இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதன்படி 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 5 முதல் 14 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கின் வழக்குரையில் கட்சி சேர்த்து பிரதான வழக்குரையை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை.

7) மேலும் இம்மனுவிற்கு 1 முதல் 3, 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 6, 8

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:08 +0530

எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியுள்ளனர். எனவே, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

9) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :– – இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.01/2025
in
O.S.No.379/2012
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 22.01.2026**